SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருப்படைஎழுச்சி**

**தில்லையில் அருளியது**

* * * * *

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறைஅறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆன நீற்றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானஊர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம்நாம் அல்லற்படை வாராமே.

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group